Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

## (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 275/2021 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW2 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | மரகதம், சிறப்பு உதவி ஆய்வாளர் |
| Father's Name | – | |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 13th March 2026

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused present. Accused counsel present.

**முதல் விசாரணை :**

நான் தற்போது நெகமம் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். மேற்படி காவல்நிலையத்தில் பணியாற்றிய உதவி ஆய்வாளர் திரு.செல்வராஜ் மற்றும் காவல் ஆய்வாளர் திரு.சண்முகசுந்தரம் ஆகியோர்களின் கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன்.

கடந்த 29.01.2019 ம் தேதி காலை 08.30 மணியளவில் மேற்படி காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளர் அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்தபோது, பழனிக்கவுண்டர் மகன் மகாலிங்கம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று நிலையக்குற்ற எண்.20/2019, சட்டப்பிரிவுகள் 279, 304A இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். அந்த புகார் **அ.சா.ஆ.2** மற்றும் முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3** ஆகும். பின்னர் வாதியின் புகாரை இணைத்து முதல் தகவலறிக்கையின் அசலை கனம் நீதித்துறை நடுவர் எண்.2, பொள்ளாச்சிக்கும் இதர நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

பின்னர் வழக்கு கோப்பினை புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வைத்ததை அவர் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, அன்றைய தினமே காலை 10.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் ஜெயபிரகாஷ் மற்றும் மாசாணி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அவைகள் முறையே **அ.சா.ஆ.4** மற்றும் **அ.சா.ஆ.5** ஆகும்.

பின்னர் வழக்கின் இறந்துபோன வெள்ளியங்கிரி என்பவரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டுள்ளார். அந்த பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.6** ஆகும். பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 8 வரையிலானவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

பின்னர் இவ்வழக்கின் இறந்துபோன வெள்ளியங்கிரி என்பவரின் பிரேத்தின் மீது பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் விஜய கிருஷ்ணன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, அவர் அளித்த பிரேத பரிசோதனை அறிக்கையை பெற்றுள்ளார். அந்த பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ.7** ஆகும்.

பின்னர் வழக்கில் சம்பந்தப்பட்ட TN 38 AA 7598 TATA 909 என்ற வாகனத்தையும், TN 41 R 5530 TVS Star City என்ற இருசக்கர வாகனத்தையும் மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பி, மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.முனுசாமி அவர்களை விசாரித்து வாக்குமூலமும் அவர் அளித்த மோட்டார் வாகன ஆய்வறிக்கைகளையும் பெற்றுள்ளார். அவைகள் முறையே **அ.சா.ஆ.8** மற்றும் **அ.சா.ஆ.9** ஆகும்.

பின்னர் வழக்கின் எதிரி நிலையத்தில் ஆஜரானவரை காரணம் கூறி கைது செய்து

நிலைய பிணையில் விடுவித்துள்ளார். பின்னர் இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இத்துடன் அவரது புலன் விசாரணை முடித்து எதிரிக்கெதிராக மேற்படி சட்டப்பிரிவுகளின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சொன்ன நேரத்தில் சொன்ன சமயத்தில் புகார் பெறப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றும், பார்வை மகஜர், மாதிரி வரைபடம் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றும் சம்பவ இடத்திற்கே போகாமல் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரியின் மீது தவறுதலாக குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளது என்றாலும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**(Sd/-. Thiru. E. Pragasam BA.,BL.,)**

Judicial Magistrate No.II,
Pollachi